**கவனிக்க.**- 2010.02.26 ஆந் திகதிய வர்த்தமானியில் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1644 - 2010 මාර්තු 05 වැනි සිකුරාදා - 2010.03.05

1644 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி (IVஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 594 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவு திரட்டுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 599 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, மாச்சு மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, பெப்புருவரி மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**தங்காலை நகர சபை**

*2010 ஆம் ஆண்டுக்கான சொத்துக்கள் வரி*

*நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகார சபை) 160 ஆவது பிரிவின்கீழ் தங்காலை நகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள சகல அசையாச் சொத்துக்களுக்கும் 1999 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுத் திருத்தத்துக்கமைய 2009 ஆம் ஆண்டுக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1465 ஆம் இலக்க 2006, செத்தெம்பர் 29 ஆந் திகதி வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ளவாறு சாதாரணமான வதிவிடங்களிலிருந்தும் பாழடைந்த காணிகளிலிருந்தும் வருடப் பெறுமானத்தின் 15% மும் வியாபார நிலையங்களின் வருடப் பெறுமானத்தின் 20% முமான அளவினை முறையே மாச்சு 31 ஆந் திகதி, யூன் 30 ஆந் திகதி, செத்தெம்பர் 30 ஆந் திகதி, திசெம்பர் 31 ஆந் திகதிகளில் சமமான நான்கு தவணைகளில் அறவிடக்கூடிய வகையில் 2010 ஆம் ஆண்டுக்கும் வரி விதித்து அறவிட தங்காலை நகரசபை தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அனில் செல்லாஹென்னதி,*
*தலைவர்,*
*தங்காலை நகர சபை.*

*தங்காலை நகரசபை,*
*2009, செத்தெம்பர் 16.*

*3-11*

---

**பொரலஸ்கமுவ நகரசபை**

*நகரசபைகள் பொது நூலகத்திற்கான துணை யாப்பு*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படவேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி (துணை யாப்புகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின்கீழ் மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரினால் 2005.12.18 ஆந் திகதிய இலக்கம் IV (அ) பிரிவின் மூலம் வர்த்தமானப் பத்திரிகையில் பிசுரிக்கப்பட்டு இருந்த நகரசபைகள் பொது நூலகத்திற்கான துணை யாப்பு மேல் மாகாண சபையின் நிர்வாக பிரதேசத்திற்கு உரிய பொரலஸ்கமுவ நகர சபையினால் 2009.09.30 ஆந் திகதிய பிரேரணை இலக்கம் 5.07 இன்கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டு உள்ளதென்பது இங்கு அறிவிக்கப்படுகின்றது.*

*தேசபந்து கே. டீ. அருண பிரியசாந்த,*
*தவிசாளர்,*
*பொரலஸ்கமுவ நகரசபை.*

*3-37*

---

**நுவரெலியா மாநகர சபை**

*இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவுசெய்யப்பட்டதாகிய அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள ஹோட்டல்களில் இருந்து வரி அறவிடல் - 2010*

*நுவரெலியா மாநகர சபை நிருவாக எல்லைக்குள் யாதாயினுமொரு ஹோட்டல், போசனசாலை அல்லது விடுதிச்சாலையை பாவனையில் விடுவோர் அத்தகைய ஹோட்டலை, போசனசாலையை அல்லது விடுதிச்சாலை (1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் நோக்கத்திற்கு) இலங்கை சுற்றுலாச் சபையில் பதிவுசெய்யப் பட்டுள்ளதாகிய அச்சந்தர்ப்பத்தில் அந்த ஹோட்டலின் போசனசாலையின் அல்லது விடுதிச் சாலையின் நடைமுறை வருடத்திற்கு உடனடுத்த முன்னைய ஆண்டு வருவாய்க்கு ஏற்ப அத்தகைய வருவாயில் நூற்றுக்கு 0.25%த்தை அனுமதிப்பத்திரக் கட்டணமாக அந்த ஹோட்டல் போசனசாலை அல்லது விடுதிச்சாலையை கொண்டுநடாத்துபவர் கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.*

*டபிள்யூ. எம். எம். ஜி. அபேசிங்க பண்டா,*
*மாநகர ஆணையாளர்,*
*நுவரெலியா மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*நுவரெலியா,*
*2009, நவெம்பர் 27.*

*3-70/5*

## கல்கமுவ பிரதேச சபைக்குச் சொந்தமான பொது நூல் நிலையத்திற்கான இடைக்கால நியதிச்சட்டம்

**நோக்கம்.**- கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிக்கும் நபர்களினதும், சமூகங்களினதும் கல்வி, தகவல், தனிநபர் அபிவிருத்தியையும், ஆக்கபூர்வ, பொழுதுபோக்குத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு பல்வேறுபட்ட தொடர்பு சாதனங்களடங்கிய வளங்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக கல்கமுவ பிரதேச சபையினால் பொது நூலக சேவையை ஆரம்பித்து நடாத்திச் செல்வதுடன், அதற்கான வழிவகை செய்வதற்காக வேண்டி இந்த இடைக்கால நியதிச் சட்டம் நியமிக்கப்படுகின்றது.

2. கல்கமுவ பிரதேச சபை பொது நூலகம் பிரதேச மக்களின் தேவைகளுக்காக கீழ்க்காணும் அங்கங்களையும், தகவல்களையும் கொண்டதாகும் :-

(i) வெளியே கொண்டு செல்லும் சேவை ;
(ii) நுண்ணாய்வுப் பிரிவு ;
(iii) சிறுவர் பிரிவு ;
(iv) வார சஞ்சிகை பிரிவு, செய்தித்தாள் பிரிவு ;
(v) கற்புல, செவிப்புல தகவல் பரிமாற்ற தொழில்நுட்பப் பிரிவு ;
(vi) ஆய்வுப் பிரிவு ;
(vii) கிரந்தப் பாதுகாப்பு பிரிவு ;
(viii) அபூர்வ கிரந்தப் பிரிவு ;
(ix) விஷேட சேகரிப்பும், பிரதேச சேகரிப்பும் ;
(x) தகவல், தஸ்தாவேஜுகள் பிரிவு ;
(xi) அங்கவீனமுற்றவர்கள், வைத்தியசாலைகள், சிறைச்சாலையில் உள்ளவர்கள் ஆகியோருக்கான நூலக சேவை ;
(xii) புகைப்படப் பிரதிச் சேவை ;
(xiii) பொது மக்களுக்கான தகவல் சேவை ;
(xiv) விவரணச் சேவை (நடமாடும், கிளை நூலக கண்காட்சி, திரைப்படக் காட்சி, கருத்தரங்கு என்பன) ;
(xv) ஏனைய தகவல் சேவைகள்.

3. கல்கமுவ பிரதேச சபையின் சகல நூலகங்களுக்கும் நூலகப் பொறுப்பாளர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டியதுடன், அப்படி நியமிக்கப்படுபவர் பொது நூலகத்தின் அமைப்பு முகாமையை உரிய முறையில் நடாத்திச்செல்வது சம்பந்தமாக பிரதேச சபைக்கு பொறுப்புக் கூறக்கூடியவராக இருத்தல் வேண்டும் :

(i) கல்கமுவ பிரதேச சபையின் பொது நூலகத்தினது அமைப்பு முகாமையை உரிய முறையில் நடாத்திச் செல்வது சம்பந்தமாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச சபைக்கு அறிக்கையிடல் வேண்டும்.

4. கல்கமுவ பொது நூலக சேவைக்கு ஆலோசனை வழிகாட்டல் செய்வதற்கு இங்கு இதன் பின்னர் 'கமிட்டி' என்றழைக்கப்படும் நூலக ஆலோசனைக் கமிட்டி ஒன்று நியமிக்கப்படல் வேண்டும் :

(i) இந்தக் கமிட்டி கல்கமுவ பிரதேச சபையினால் வருடாந்தம் நியமிக்கப்படும். அது பின்வரும் நபர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :-

(அ) பிரதேச சபையின் தலைவர் ;
(ஆ) சபையின் அங்கத்தவர்களிடையே எல்லாத் தொகுதியினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு தொகுதியினரிடையேயிருந்தும் ஒரு அங்கத்தவரையேனும் உள்ளடக்கும் வகையில் மூவருக்கு குறையாத அங்கத்தவர்கள் ;
(இ) சபையின் அதிகார எல்லைக்குள் வசிக்கும் மக்கள் பின்பற்றும் மதங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் ஒவ்வொரு மதத்தவர்களிடையே இருந்தும் ஒரு அங்கத்தவர் வீதம் ;
(ஈ) பிரதேசத்தில் வாழும் முக்கிய நபர்கள் நால்வர் ;
(உ) பிரதேச சபையின் செயலாளர் ;
(ஊ) சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ;
(எ) பிரதேச சபையின் எல்லா நூலகங்களினதும் நூலகப் பொறுப்பாளர்கள் ;
(ஏ) அதிகார எல்லைக்குள் உள்ள சனசமூக நிலையமொன்றினது அங்கத்தவர் ;
(ஒ) அதிகார எல்லைக்குள் உள்ள பாடசாலையின் அதிபர் ஒருவர்.

2. கமிட்டியின் அங்கத்தவர் தொகை 23 பேருக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும்.

3. கல்கமுவ பிரதேச சபையின் தலைவர் பதவி வழியாக கமிட்டியின் தலைவராக இருத்தல் வேண்டியதுடன், அதன் எல்லா கூட்டங்களுக்கும் தலைவர் சமுகம் கொடுக்காத சந்தர்ப்பத்தில் சமுகமளித்திருக்கும் அங்கத்தவர்களிடையே தெரிவுசெய்யப்படும் ஒருவர் கூட்டத்துக்கு தலைமை வகித்தல் வேண்டும்.

4. சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் கமிட்டியின் செயலாளராக இருத்தல் வேண்டும்.

5. கூட்டம் நடாத்துவதற்கான குறைந்தபட்ச எண்ணிக்கை (கோரம்) –

(அ) கூட்டம் நடாத்துவதற்கான குறைந்தபட்ச எண்ணிக்கை (கோரம்) கமிட்டி அங்கத்தவர்களின் 1/2 ஆக இருத்தல் வேண்டும்.

(ஆ) எந்த ஒரு கூட்டத்தினதும் தலைவருக்கு அங்கத்துவத்திற்கான ஒரு வாக்கும், ஏதும் பிரச்சினை சம்பந்தமாக சார்பாகவும், எதிராகவும் வாக்கு எண்ணிக்கை சரிசமமாக இருந்தால் மத்தியஸ்த வாக்கொன்றை வழங்கவும் முடியும்.

6. அங்கத்துவம் –

(I) நூலகத்தின் அங்கத்துவம் பெறுவதற்கு கீழ்க்காணும் தகைமைகள் இருத்தல் வேண்டும் :

(i) பொதுவான அங்கத்துவம் பெறுவதற்காக வயது 12 வருடங்களுக்கு மேற்பட்டு இருத்தல் வேண்டும். சிறுவர் அங்கத்துவத்திற்கான வயது 12 வருடத்துக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

(ii) கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வசிப்பவராக அல்லது கல்வி கற்பவராக அல்லது சொத்துக்களைக் கொண்டவராக அல்லது தொழில் செய்பவராக இருத்தல் வேண்டும்.

(II) **அங்கத்துவக் கட்டணம் :**

(i) அங்கத்துவம் பெறும்போது ஆரம்பத்தில் ரூபா 50 கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். வருடத்துக்கு ஒரு முறை ரூபா 30 ஐச் செலுத்தி அங்கத்துவத்தை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அங்கத்துவக்

கட்டணம் கமிட்டியின் சிபாரிசுப்படி சபையினால் காலத்துக்குக்காலம் ஆலோசனை நியமப்படி நியமிக்க முடியும்.

(III) **பிணைக்காரர்கள் -**

(i) கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வரி செலுத்தும் ஒருவர், அரச/மாகாண சேவையில் நிரந்தரப்பதவி வகிக்கும் ஒருவரை பிணைகாரராக முன்வைக்கப்படல் வேண்டும்.

(ii) சிறுவர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் அவர்களின் தாய்/தந்தை/பாதுகாவலர்/அதிபர்/வகுப்பாசிரியர் அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(iii) நிரந்தர வசிப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம உத்தியோகத்தரின் கடிதம் இணைக்கப்படல் வேண்டும்.

(iv) அங்கத்துவம் பெற்றுக்கொள்ளல் :

(i) நூலக சேவையைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் எல்லா நபர்களும் சபையினால் காலத்துக்குக்காலம் ஆலோசனை நியமப்படி நியமிக்கப்படுகின்ற கட்டணத்தைச் செலுத்தி நூலகப் பொறுப்பாளரிடமிருந்து பெற்றுக் கொண்ட விண்ணப்பப்படிவத்தை நிரப்பி அங்கத்துவம் கோரல் வேண்டும். அந்த விண்ணப்பப்படிவத்தை கீழ்க் குறிப்பிடப்படுகின்ற ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் :

(அ) வசிக்கும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் ;
(ஆ) சமயத் தலைவர் ஒருவர் ;
(இ) சமாதான நீதவான் ;
(ஈ) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் நிறைவேற்றுத் தர உத்தியோகத்தர் ;
(உ) பிரதேச சபை அங்கத்தவர் ;
(ஊ) பாடசாலை விண்ணப்பதாரியாயின் அந்த விண்ணப்பதாரியின் வகுப்புக்கு பொறுப்பான பொறுப்பாசிரியர் அல்லது அதிபரின் உறுதிப்பத்திரம்.

ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் விநியோகிக்கவேண்டிய அனுமதிப்பத்திரங்களின் தொகையை சபையினால் நூலக ஆலோசனைக் கமிட்டியின் சிபாரிசுடன் காலத்துக்குக் காலம் ஆலோசனை நியமப்படி தீர்மானிக்க வேண்டும்.

7. புத்தகங்களை வெளியே கொண்டுசெல்வதற்கான நூலக சேவையின் அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தின் பிரகாரம் அங்கத்தவரினால் கொண்டுசெல்லப்படும் ஒவ்வொரு புத்தகத்திற்கும் அவர் பொறுப்புக் கூற வேண்டும். ஒவ்வொரு அங்கத்தவருக்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அனுமதிப்பத்திரங்களின் தொகையை நூலக ஆலோசனைக் கமிட்டியின் சிபாரிசுடன் காலத்துக்குக் காலம் ஆலோசனை நியமப்படி தீர்மானிக்க வேண்டும்.

8. புத்தகங்களை வெளியே கொண்டுசெல்வதற்கான நூலக சேவையில் அங்கத்தவர் ஒருவரினால் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு புத்தகத்தைப் பெற்றுக்கொண்ட தினத்தில் இருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் நூலகப் பொறுப்பாளருக்கு திருப்பி ஒப்படைக்க வேண்டும். அப்படியான ஒரு புத்தகத்தை பிரிதொரு அங்கத்தவர் அந்தப் புத்தகத்தை கேட்டிராவிட்டால் அந்தப் புத்தகத்தை மேலும் பதினான்கு (14) நாட்களுக்கு பெற்றுக்கொள்வதற்கு நூலகப் பொறுப்பாளரினால் அந்த அங்கத்தவருக்கு அனுமதி வழங்க முடியும்.

9. 8 ஆம் இடைக்கால நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதினான்கு (14) நாட்கள் கால எல்லைக்குள் ஏதாவது ஒரு புத்தகத்தை நூலகப் பொறுப்பாளருக்கு திருப்பிக்கொடுக்க அங்கத்தவர் தவறும் சந்தர்ப்பத்தில் அந்தப் புத்தகத்தை திருப்பிக்கொடுக்க வேண்டிய திகதியிலிருந்து மேலதிக ஒவ்வொரு நாளைக்கும் ஒரு ரூபா (ரூ. 1.00) வீதமும் சிறுவர் நூலக அங்கத்தவர் ஒருவரிடமிருந்து ஐம்பது சதம் (சதம் 50) வீதமும் தண்டனைப் பணமும் அல்லது கமிட்டியின் சிபாரிசின் பிரகாரம் சபையினால் காலத்துக்குக் காலம் ஆலோசனை நியமப்படி தீர்மானிக்கப்படும் ஏதாவது ஒரு தொகையை தண்டனைப் பணமாகச் செலுத்துவதற்கு உடன்படல் வேண்டும்.

10. புத்தகங்களை வெளியே கொண்டுசெல்வதற்கான நூலக சேவையிலிருந்து தன்னால் பெற்றுக்கொண்ட புத்தகத்தை 8 ஆம் இடைக்கால நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பதினான்கு (14) நாட்கள் கால எல்லையைத் தாண்டியவுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு தண்டனைப்பணம் அறவிடப்படும் :

1 நாள் முதல் 30 நாட்கள் வரை ஒரு நாளைக்கு ஒரு புத்தகத்துக்கு ரூபா 1 வீதமும் ;
31 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை ஒரு புத்தகத்துக்கு ரூபா 40 வீதமும் ;
91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை ஒரு புத்தகத்துக்கு ரூபா 80 வீதமும் ;
180 நாட்களுக்கு மேற்பட்ட காலத்துக்கு ஒரு புத்தகத்துக்கு ரூபா 100 வீதமும்.

எனினும் சிறுவர் அங்கத்தவர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகையானது 10 ஆம் இடைக்கால நியதிச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தொகையின் அரைவாசியாகும்.

11. ஒரு புத்தகம் தொலைந்துவிட்டதாக கருதப்படும் சந்தர்ப்பத்தில் அந்த புத்தகத்தின் பெறுமதி, அதைக் கட்டுவதற்கான கட்டணம், அந்தப் புத்தகத்தை திருப்பி விலைக்கு வாங்குவதற்கான செலவு, 10 ஆம் இடைக்கால நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனைப்பணம் ஆகியவற்றை அங்கத்தவரினால் செலுத்தப்படல் வேண்டும். இங்கு நியம முறையையும், ஆலோசனைக் கமிட்டியின் சிபாரிசினை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட வேண்டிய தொகையினை நூலகப் பொறுப்பாளரினால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

12. அங்கத்தவரினால் நூலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட புத்தகத்திற்கு எதுவிதமான சேதமோ, அதன் தோற்றத்தை மாற்றவோ கூடாது.

13. புத்தகங்களை வெளியே கொண்டுசெல்வதற்கான நூலக சேவையிலிருந்து தன்னால் பெற்றுக்கொண்ட புத்தகத்திற்கு ஏதும் சேதம் ஏற்பட்டிருந்தால் உடனடியாக நூலகப் பொறுப்பாளருக்கு தெரியப் படுத்துவதற்கு அங்கத்தவர் ஒருவர் தவறும் சந்தர்ப்பத்தில் அந்தப் புத்தகம் குறிப்பிட்ட அங்கத்தவருக்கு சேதம் அல்லது உருமாற்றம் இல்லாமல் வழங்கப்பட்டதாகவே கருதப்படும்.

14. அங்கத்தவர் ஒருவரினால் திருப்பி ஒப்படைக்கப்பட்ட புத்தகம் தொடர்ந்தும் வழங்குவதற்கு தகுதியற்ற வகையில் அவரால் சேதம் ஏற்படுத்தி அல்லது உருமாற்றி உள்ளதாக திருப்திப்படும் சந்தர்ப்பத்தில் அந்தப் புத்தகத்தை திரும்பவும் விலைக்கு வாங்குவதற்கு தற்போதைய கொள்வனவு விலையை செலுத்துவதற்கு அங்கத்தவர் கட்டுப்பட்டுள்ளார். அந்தப் புத்தகத்துக்கான மாற்று புத்தகத்தை விலைக்கு வாங்கியதன் பின்னர் சேதமடைந்த புத்தகத்தை 'பொது நூலகத்தின் சேதமடைந்த புத்தகமாக விற்பனை செய்யப்பட்டது' என்று முத்திரையிட்டு அந்த அங்கத்தவருக்கு திருப்பிக் கொடுக்க வேண்டும். அப்படித் திருப்பி விலைக்கு வாங்கிய புதிய புத்தகத்துக்கு சேதமடைந்த புத்தகத்தின் சேர்ப்பு இலக்கத்தை இடல் வேண்டும். அப்படி புதிதாகப் பெற்றுக்கொள்ள முடியாதவிடத்து அதை தொலைந்துபோன புத்தகமாகக் கருதி 11 ஆம் இடைக்கால நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செயல்படல் வேண்டும்.

15. (i) நூலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட புத்தகத்தை எந்த அங்கத்தவரும் வேறொரு நபருக்கு கைமாற்றக்கூடாது.

(ii) இந்த இடைக்கால நியதிச்சட்டத்தின் முதலாம் பந்தியின் விதிமுறைகளை மீறும் எந்த ஒரு அங்கத்தவரதும் அங்கத்துவப்பணம் இல்லாமல் போவதுடன் புத்தகங்களை வெளியே கொண்டு செல்வதற்கான நூலக சேவையிலிருந்து அவருடைய அங்கத்துவமும் இல்லாமல் செய்யப்படும்.

16. (i) தொற்றுநோய் போன்ற கடுமையாக பரவக்கூடிய நோயாளி பாவித்ததாக தாம் அறிந்த வகையில் ஏதாவது புத்தகத்தை எந்தவொரு அங்கத்தவரும் வெளியேகொண்டு செல்வதற்கான நூலக சேவையிலிருந்து பெற்றுக்கொண்ட புத்தகத்தை நூலகத்துக்கு திருப்பி ஒப்படைக்கக் கூடாததுடன், அதுபற்றி உடனடியாக நூலகப் பொறுப்பாளருக்கு அறிவித்து நூலகப் பொறுப்பாளரினால் வழங்கப்படும் ஆலோசனை நியமங்களுக்கு ஏற்ப குறிப்பிட்ட அங்கத்தவர் மூலம் அந்தப் புத்தகம் சம்பந்தமாக செயல்படல் வேண்டும்.

(ii) நூலக அங்கத்தவர் ஒருவரினால் பெற்றுக்கொண்ட புத்தகம் தொற்றுநோய் போன்ற கடுமையாக பரவக்கூடிய நோயாளியால் பாவிக்கப்பட்டிருந்தால் அந்தப் புத்தகத்தை அழித்துவிடல் வேண்டும். அதை திருப்பி விலைக்கு வாங்குவதற்கான செலவை அந்த அங்கத்தவரினால் நூலகப் பொறுப்பாளருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

17. ஏதாவதொரு புத்தகத்தை பெற்றுக்கொடுக்க வேண்டியது எந்த அங்கத்தவருக்கு என்ற கருத்து முரண்பாடு புத்தகங்களை வெளியே கொண்டுசெல்வதற்கான நூலக சேவையின் அங்கத்தவர் இருவருக்கு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களுக்கிடையே ஏற்படின் அந்த கருத்து முரண்பாட்டை நூலகப் பொறுப்பாளர் தீர்த்துவைக்க வேண்டும்.

18. வெளியே கொண்டுசெல்வதற்கான நூலக சேவையில் இருக்கும் புத்தகம் அல்லது நூலகப் பொருள் ஒன்று சம்பந்தமாக ஏதொவதொரு அங்கத்தவர் மூலம் கோரப்படும்போது அதை வழங்கப்படல் வேண்டியதுடன், வேண்டப்படும் வேளையில் குறிப்பிட்ட புத்தகம் வேறொருவருக்கு ஏற்கனவே விநியோகிக்கப்பட்டிருப்பின் விண்ணப்பதாரியின் அல்லது விண்ணப்பதாரிகளின் பெயர்களை எதிர்பார்த்திருப்பவர்களின் பெயர்ப்பட்டியலில் குறிப்பிட்டு நூல் நிலைய பொருள் நூலகத்துக்கு திரும்ப கிடைத்த பின்னர் அந்த நபருக்கு பெற்றுக்கொடுக்க நூலகப் பொறுப்பாளர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

19. தேசிய நூலக தஸ்தாவேஜுகள் சேவைகள் சபையின் நியமங்களுக்கு அமைய குறிப்பிட்ட திகதிகளிலும், குறிப்பிட்ட கால எல்லைக்குள்ளும் வாசகர்களுக்காக நூல் நிலையத்தை திறந்து வைத்திருத்தல் வேண்டும். எனினும் விசேட காரணத்திற்காக சபையின் விருப்பத்துடன் அனுமதியுடன் நூல் நிலையத்தை திறந்து வைத்திருக்கும் திகதிகள் நேரம் பற்றி தீர்மானிக்க முடியும்.

20. **மீளாய்வுப்பகுதி விசாரணைப் பகுதி** :

(i) நூல் நிலையப் பொறுப்பாளரின் அனுமதியுடன் மீளாய்வுப் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும் ஆவணத்தில் கையெழுத் திட்டு மீளாய்வு கிரந்தங்களை பரிசீலனை செய்ய வேண்டும்.

(ii) வாசிப்பதற்காக தமக்கு வழங்கப்படும் ஏதும் நூல் நிலையத்தினது ஆவணங்களை மீளாய்வுப் பிரிவிலிருந்து வெளியே எடுத்துச்செல்லக் கூடாது. எனினும் புகைப்படப் பிரதி சேவை இருக்குமாயின் நூல் நிலையப் பொறுப்பாளரின் அனுமதியுடனும், அவரின் பாதுகாப்புடனும் அந்த வெளியீட்டின் தேவையான பக்கங்களை உரிய கட்டணத்தைச் செலுத்தி பிரதியைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதும் நபருக்கு வழிவகை செய்து கொடுக்க வேண்டும்.

21. வாசிப்பு மண்டபம், வாரத்தின் எல்லா நாட்களிலும் வாசிப்பு மண்டபம் முற்பகல் 8.00 மணி முதல் பிற்பகல் 8.00 மணிவரை அல்லது கமிட்டியின் அங்கீகாரத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற திகதிகளிலும், நேரங்களிலும் திறந்துவைத்திருத்தல் வேண்டும். வாசிப்புச் சாலையை பாவிப்பதற்கு எந்தவொரு நபருக்கும் முடியுமானதுடன், அதற்காக வாசிப்புச்சாலையுடன் சேவையைப் பயன்படுத்த முடியும்.

22. வாசிப்பு மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள அல்லது வாசிகசாலைக்குச் சொந்தமான எந்தவொரு பத்திரிகை, வார சஞ்சிகை, சஞ்சிகை, வரைபடம் அல்லது வேறும் ஏதும் ஒரு பொருளுக்கு சேதம் விளைவிக்கக்கூடாததுடன், வெளியே கொண்டுசெல்லவும் கூடாது.

23. எந்தவொரு நபரும் -

(i) நூல் நிலையச் சூழலுக்குள் அல்லது அதற்கு அண்டிய பகுதிக்குள் முறைகேடாக நடந்துகொள்ளவோ ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துதல் அல்லது அவ்வாறு நடந்துகொள்ளக் கூடாது ;

(ii) நூல் நிலையத்துக்குள் அல்லது அதன் சுற்றுப்புற சபையின் ஏதாவதொரு கட்டிடத்தின் ஒரு பகுதிக்குள் அல்லது ஏதாவது சொத்துக்கு நஷ்டம் ஏற்படுத்தல் அல்லது ஏதாவது ஒரு வகையில் அவைகளை அலங்கோலப்படுத்துதல் கூடாது ;

(iii) நூல் நிலையத்தை திறந்து வைத்திருக்கும் நேரத்திற்கு பின்னர் குறிப்பிட்ட நூல் நிலைய சுற்றுப்புறத்தில் தேவையற்று நடமாடுதல் கூடாது ;

(iv) நூல் நிலைய சுற்றுப்புறத்தில் புகைபிடித்தல் கூடாது ;

(v) நூல் நிலைய சுற்றுப்புறத்தில் சப்தமிடுதல், பாட்டுப்பாடுதல் அல்லது வேறும் வகையில் சப்தமேற்படுத்தி நூல் நிலையத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது ;

(vi) நூல் நிலைய சுற்றுப்புறத்தில் எந்தவொரு கால்நடைப் பிராணிகளையும் கொண்டுவரக்கூடாது ;

(vii) நூல் நிலையத்துக்குள் நித்திரைசெய்தல் உணவருந்துதல் கூடாது ;

(viii) நூல் நிலைய பொறுப்பாளரின் அல்லது நூல் நிலையப் பொறுப்பாளரின் கட்டளைப்படி, செயற்படும் ஏனைய

எந்தவொரு நபருக்கும் அல்லது இந்த இடைக்கால நியதிச் சட்டத்தின் கீழ் அவருடைய அதிகாரத்தை நடைமுறைப் படுத்துவதற்கு இடையூறாக இருத்தல் கூடாது ;

(ix) நூல் நிலையத்துக்குள் உத்தரவின்றி புகைப்படமெடுத்தல், சப்தத்தை வெளியிடுதல், ஒளிப்பதிவு செய்தல், சப்தத்தை மீள் வெளியிடுதல் கூடாது ;

(x) கையடக்க தொலைபேசி, புகைப்படக் கருவி, கெமரா, லைட் போன்றவைகளை நூல் நிலையத்துக்குள் கொண்டுவருவது தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த இடைக்கால நியதிச்சட்டத்தின் பிரகாரம் செயற்படத்தவறும் எந்த ஒரு நபரையும் நூல் நிலைய குழுவிலிருந்து வெளியேற்றும் உரிமை நூல் நிலையப் பொறுப்பாளருக்கு உண்டு.

*24*. வெளியே கொண்டுசெல்லும் பிரிவைத் தவிர மீளாய்வுப் பகுதி உட்பட ஏனைய பகுதிகளிலிருந்து பயன்பெறுவதற்கு கமிட்டியின் சிபாரிசின் பிரகாரம் சபையினால் தீர்மானிக்கப்படும் கட்டணம் ஒன்றை நூல் நிலைய அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனையவர்களிடமிருந்து அறவிட முடியும்.

*25*. **வருடாந்த தொகை கணக்கெடுப்பு**.- நூல் நிலையத்தினது ஒவ்வொரு வருடமும் வருடாந்த தொகை மதிப்பீடு ஒன்றை நடத்துவது பிரதேச சபையின் செயலாளரது பொறுப்பாகும். வருடாந்த மதிப்பீட்டு அறிக்கையை சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். சபையினால் நிறைவேற்றப்படுகின்ற சிபாரிசுகளை சபையின் அங்கீகாரம் பெற்று மூன்று மாதங்களுக்குள் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

*26*. **விவரணச் சேவை**.- கருத்தரங்கு, மாநாடு, வேலைக்களம் உட்பட வேறும் விவரணச் சேவைக்காக சபையினால் வசதிகள் செய்தல்.

*27*. கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அரச சார்பற்ற ஏதாவது ஒரு நிறுவனத்தால் அல்லது அமைப்பினால் ஏதாவதொரு நூல் நிலையம் அல்லது நூல் நிலைய சேவை நடாத்துவதாயின் அந்த தாபனம் அல்லது நிறுவனத்தினால் அதற்கான பிரதேச சபையின் முன் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். (அவை பாடசாலை, பிரிவெனாக்கள் அல்லது மத நிலையங்களில் அமைந்துள்ள நூல் நிலையங்களுக்கு பொருந்தாது.)

*28*. இந்த இடைக்கால் நியதிச் சட்டத்தை மீறுவது சம்பந்தமாக, அதை மீறும் ஏதாவதொரு செயல் அல்லது செய்யாமல் விடுவதற்காக ரூபா ஐநூற்றைம்பதுக்கு மேற்படாத தண்டமும், அந்த மீறுதலை தொடர்ந்து கைவிடாமல் செய்துவந்தால் உரிய அதிகாரம் உள்ள நீதிமன்றொன்றில் வழக்குத் தாக்கல் செய்து குற்றவாளியாகக் காணப்பட்டதன் பின்னர் அல்லது அந்த மீறுதல் மீது தலைவரின் கவனத்துக்கு கொண்டுவந்து தலைவரினால் அல்லது அதிகாரம்பெற்ற பிறிதொரு உத்தியோகத் தரினால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டு அதன் பின்னரும் தொடர்ந்து அந்த மீறலைச் செய்துகொண்டு வந்தால் அப்படிச் செய்யும் ஒவ்வொரு நாளைக்கும் ரூபா இருநூற்றைம்பதுக்கு அதிகரிக்காத மேலதிக தண்டம் கொண்ட தண்டனையும் அங்கத்துவத்தை இரத்துச் செய்வதற்கான தேவையான நடவடிக்கை எடுக்கவும் முடியும்.

*29*. **பதங்கள் சம்பந்தமாக விளக்கம் தேவைப்படின்**-

* நூல் நிலையப் பொறுப்பாளர் என்றால், வடமேல் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்படுகின்ற நூல் நிலைய சேவைகள் உள்ள பிரதேச சபைகளின் நூல் நிலையங்களுக்கு பொறுப்பாக கடமையிலுள்ள பிரதான உத்தியோகத்தராவார்.
* சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் என்றால், உள்ளூராட்சி ஆணையாளரினால் பிரதேச சபையின் சனசமூக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நியமனம் செய்யப்படுகின்ற நிறைவேற்று உத்தியோகத்தராவார்.
* நூல் நிலைய வளங்கள் என்றால், எழுத்துமூல, அச்சிட்ட கற்புல, செவிப்புல உட்பட இலத்திரனியல் ஊடகங்களைக் குறிக்கும்.
* சபை என்றால் கலகமுவ பிரதேச சபையினைக் குறிக்கும்.
* கமிட்டி என்றால் நூல் நிலைய ஆலோசனைக் கமிட்டியைக் குறிக்கும்.
* பிரபுக்கள் என்றால் அதிகார எல்லைக்குள் வசிக்கின்ற கீர்த்திமிக்க குறிப்பிடத்தக்க சேவை செய்கின்ற படித்த விவேகமுள்ள நபர்களைக் குறிக்கும்.

*3-207*

---

## கல்கமுவ பிரதேச சபை

வீடுகள், சொத்துக்கள் அபிவிருத்தியும், காணிகளை துண்டுபோட்டு விற்பனை செய்வது பற்றி நியம உப நியதிச் சட்டத்தை ஏற்றல்

வடமேல் மாகாண, உள்ளூராட்சி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1317 ஆம் இலக்க, 2003 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதியுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV (அ) ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்ட வீடுகள், சொத்துக்கள் அபிவிருத்தியும், காணிகளை துண்டு போட்டு விற்பனை செய்வது பற்றி நியம உப நியதிச் சட்டம் 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதிய சபையின் 4-11 ஆம் இலக்க தீர்மானத்தின்கீழ் ஏற்றுக்கொள்வதற்கு கௌரவ பிரதிநிதி திருமதி தமரா லலனி ருத்ரிகோ அவர்களின் பிரேரணையுடனும், கௌரவ பிரதிநிதி திரு. ஆர். ஐ. பி. சேனாதீர அவர்களின் ஆமோதிப்புடனும் ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

கல்கமுவ பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்துக்குள், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து செல்லுபடியாகும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எச். கே. விமலரத்ன,
தலைவர்,
கல்கமுவ பிரதேச சபை.

*2010.01.15.*

*3-92*

# நானாவித அறிவித்தல்கள்

## சம்மாந்துறைப் பிரதேச சபை

வியாபார அனுமதிக் கட்டணம் மற்றும் வரிகள் - 2010

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149, 150, 151 மற்றும் 152 ஆம் பிரிவுகளின் பிரகாரம் சம்மாந்துறைப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடப்பரப்பினுள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு நிரல் 1 இல் அடங்கிய ஏதாவது தொழில் புரியும் ஆள் எவரும் நிரல் 11 இல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு வியாபார அனுமதிக் கட்டணத்தை வருடாந்தம் செலுத்துதல் வேண்டுமென இத்தால் அறியத்தருகிறேன். இது குறித்த மற்றொரு அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் செய்யப்படும் வரை எதுவித மாற்றமுமின்றி 01.01.2010 முதல் இது நடைமுறையில் இருக்கும்.

எம். ஐ. எம். மன்சூர்,
தவிசாளர்,
சம்மாந்துறைப் பிரதேச சபை.

தலைமை அலுவலகம்,
சம்மாந்துறைப் பிரதேச சபை,
சம்மாந்துறை.
2009.11.25.

### அட்டவணை 1

| தொடர் இல. | நிரல் I<br>வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>வருடாந்த உரிமக் கட்டணம்<br>ரூ. 750 க்கு உட்படின்<br>ரூபா ச. | ரூ. 751 தொடக்கம் 1,500 வரை<br>ரூபா ச. | ரூ. 1,500 க்கு மேல்<br>ரூபா ச. |
|---|---|---|---|---|
| 1 | ஒரு தேநீர் கடை அல்லது கோப்பிக் கடை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 2 | சாப்பாட்டுக் கடை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 3 | தேநீர் கடையும் சாப்பாட்டுக் கடையும் வைத்திருத்தல் | 600 0 | 1,000 0 | 1,500 0 |
| 4 | ஒரு பாண் போரணை வைத்திருத்தல் | 600 0 | 800 0 | 1,000 0 |
| 5 | ஒரு பாண் போரணையும், தேநீர் கடையும், சாப்பாட்டுக்கடையும் வைத்திருத்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 6 | தங்க ஆபரணங்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 7 | தங்க ஆபரணங்களை ஒட்டும் அல்லது தங்க முலாமிடும் இடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 8 | கொல்லுலை ஒன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 9 | தச்சுத் தொழில் நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 10 | மரம் அரியும் இயந்திர ஆலையை வைத்திருத்தல் | - | - | 2,000 0 |
| 11 | மரத் தளபாடங்கள் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 12 | இரும்புத் தளபாடங்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | | | |
| 13 | அரிந்த மரம் அல்லது கைமரம், கம்புகள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 14 | ஒரு விறகு விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 15 | கருங்கல் குவாரி ஒன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 16 | கருங்கல் தூளாக்கும் இயந்திரம் வைத்திருத்தல் | 1,000 0 | 1,500 0 | 2,000 0 |
| 17 | செங்கல் உற்பத்தியும் சூளையும் வைத்திருத்தல் | 500 0 | 600 0 | 800 0 |
| 18 | சீமெந்தினால் கல் மற்றும் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 19 | இயந்திரத்தினால் சீமெந்துக்கல் மற்றும் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 20 | சீமெந்து விற்பனை செய்யும் இடத்தை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 21 | ஓட்டுத் தொழிற்சாலை ஒன்றைப் பேணுதல் | - | - | 5,000 0 |
| 22 | அஸ்போல்ட் ப்லான்ட் (Asphalt Plant) ஒன்றைப் பேணுதல் | - | - | 50,000 0 |
| 23 | ஐஸ் பெக்டரி ஒன்றைப் பேணுதல் | - | - | 5,000 0 |
| 24 | வெல்டிங் கராஜ் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 25 | வாயு மூலம் உலோகங்கள் ஒட்டுமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 26 | ஐஸ் கிறீம் தயாரிக்கும் அல்லது விற்கும் இடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 27 | மிளகாய்த்தூள் அல்லது தானியங்கள் அரைக்கும் இயந்திரத்தை பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 28 | நெல் குற்றும் இயந்திரம் ஒன்றை பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 29 | நெல் குற்றும் ஆலை ஒன்றைப் பேணுதல் | - | - | 2,000 0 |

| தொடர் இல. | நிரல் I<br>வியாபாரத்தின் தன்மை | நிரல் II<br>வருடாந்த உரிமக் கட்டணம்<br>ரூ. 750 க்கு உட்படின்<br>ரூபா ச. | ரூ. 751 தொடக்கம் 1,500 வரை<br>ரூபா ச. | ரூ. 1,500 க்கு மேல்<br>ரூபா ச. |
|---|---|---|---|---|
| 30 | தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரம் ஒன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 31 | எரிவாயு களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 32 | தும்பு உற்பத்தி மற்றும் தும்புப் பொருட்கள் உற்பத்தி செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 33 | அலுமினியம், பிளைவுட், கண்ணாடி மற்றும் பொருட்களின் விற்பனையும் பொருத்து நிலையமும் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 34 | அரிசி, தானியங்கள் மற்றும் விலங்குகளுக்கான உணவு விற்பனை நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 35 | இயந்திரம் மூலம் சலவைத் தொழில் செய்யுமிடமொன்றைப் பேணுதல் | – | – | 1,000 0 |
| 36 | வாகனங்களுக்கான டயர், டியூப் விற்பனையும் மாற்று நிலையம் பேணுதலும் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 37 | கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 38 | ஹாட்வெயார் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 39 | தீந்தை விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 40 | மின் இணைப்பிற்கான மின் பொருட்களின் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 41 | துவிச்சக்கர வண்டி விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 42 | துவிச்சக்கர வண்டி திருத்துமிடம் ஒன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 43 | துவிச்சக்கர வண்டி உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 44 | மோட்டார் பைசிக்கிள் திருத்துமிடம் ஒன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 45 | மோட்டார் பைசிக்கிள் மற்றும் ஆட்டோ திருத்துமிடமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 46 | மோட்டார் வாகனங்கள் திருத்துமிடமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 47 | மோட்டார் பைசிக்கிள் சுத்தம் செய்யும் இடமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 48 | மோட்டார் வாகனங்கள் சுத்தம் செய்யும் இடமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 49 | மோட்டார் பைசிக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 50 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 51 | மோட்டார் பைசிக்கிள் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 52 | மோட்டார் வாகனங்கள் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | – | – | 3,000 0 |
| 53 | மோட்டார் வாகன சட்டங்கள் பொருத்து அல்லது திருத்து நிலையமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 54 | மோட்டார் வாகன பெற்றரிக்கு மின் ஏற்றும் நிலையமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 55 | மோட்டார் வாகன பெற்றரி மின் ஏற்றும் நிலையமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 56 | மோட்டார் வாகனங்களுக்கு தீந்தை பண்ணும் இடமொன்றை பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 57 | மோட்டார் வாகனங்களுக்கான மின்சாரப் பகுதி திருத்தம் செய்யும் இடமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 58 | எரிபொருள் நிரப்பு நிலையமொன்றைப் பேணுதல் | – | 1,000 0 | 2,000 0 |
| 59 | விவசாய இரசாயனப் பொருட்கள் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 60 | விவசாய இரசாயனப் பொருட்கள் களஞ்சியப்படுத்தல் | – | 1,000 0 | 2,000 0 |
| 61 | மின்சார உபகரணங்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 62 | மின்சார உபகரணங்கள் திருத்தம் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 63 | குளிர்சாதனங்களை திருத்தும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 64 | கணனி விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 65 | கணனி திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 66 | இன்டனெட் சேவை வழங்கும் நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 67 | கணனி/தட்டச்சு மூலம் கடிதம் அல்லது ஆக்கங்கள் செய்யுமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 68 | அச்சகம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 69 | இயந்திரம் மூலம் நிழற்பிரதி நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 70 | கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 71 | கணனி/கையடக்கத் தொலைபேசி திருத்துமிடம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 72 | பழைய உலோகங்கள் மற்றும் பொருட்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 73 | பழைய வீட்டுத்தளபாடங்கள் விற்பனை நிலையம் ஒன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 74 | பாவித்த கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 75 | பாவித்த மின்சார மற்றும் பொருட்களின் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 76 | பால் பதனிடு நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |

| தொடர் இல. | நிரல் I | நிரல் II | | |
|---|---|---|---|---|
| | வியாபாரத்தின் தன்மை | வருடாந்த உரிமக் கட்டணம் | | |
| | | ரூ. 750 க்கு உட்படின் ரூபா ச. | ரூ. 751 தொடக்கம் 1,500 வரை ரூபா ச. | ரூ. 1,500 க்கு மேல் ரூபா ச. |
| 77 | பாற் பொருட்களை உற்பத்தி நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 78 | ஸ்ரூடியோ ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 79 | கைத்தறி நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 80 | இயந்திர தறி நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | - | 1,000 0 | 2,000 0 |
| 81 | ரெடிமேட் ஆடைகள் தயாரிக்கும் நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | - | 1,000 0 | 2,000 0 |
| 82 | தையல் நிலையமொன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 83 | பிடவைக்கடை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 84 | ஆடைத் தொழிற்சாலை ஒன்றை வைத்திருத்தல் | - | - | 5,000 0 |
| 85 | சிகை அலங்கார நிலையமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 86 | குளிர்பான விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 87 | குளிர்பானம் மற்றும் ஐஸ்கிறீம் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 88 | இனிப்புப் பண்டங்கள் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 89 | சீவல் கடையொன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 90 | குசன் செய்யும் இடம் ஒன்றைப் பேணுதல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 91 | கடிகாரம் திருத்துமிடம் ஒன்றைப் பேணுதல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 92 | இறப்பர் சீல், பிளாஸ்டிக் மற்றும் ஏனைய பெயர்ப்பலகைகள் தயாரித்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 93 | எலும்பு சேகரிக்கும் இடமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 94 | தோல் சேகரிக்கும் இடமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 95 | சீமெந்து வியாபார நிலையத்தை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 96 | பலசரக்கு கடையொன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 97 | மரக்கறிக் கடையொன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 98 | அலங்காரப் பொருட்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 99 | மிளகாய், பலசரக்குத் தூள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 100 | உணவுப் பொருட்கள் உற்பத்தி நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 101 | விலங்குகள் உணவு உற்பத்தி நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 102 | பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 103 | சமையல் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 104 | பரிசுப் பொருட்கள் விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 105 | புத்தகக் கடையொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 106 | காகிதாதிகள் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 107 | பழக்கடை ஒன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 108 | பாமசி ஒன்றை வைத்திருத்தல் | - | 1,000 0 | 2,000 0 |
| 109 | ஆயுர்வேத மூலிகை மற்றும் மருந்து விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 110 | ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கும் இடமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 111 | கருவாட்டுக்கடை ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 112 | பாதணிக்கடையொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 113 | பாதணிகள் உற்பத்தி செய்யுமிடமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 114 | பாதணிகள் மற்றும் பொருட்கள் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 115 | முகவர் தபால் நிலையம் ஒன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 116 | பூக்கன்றுகள் மற்றும் கன்றுகள் விற்பனை செய்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 117 | மாட்டுப்பண்ணை ஒன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 118 | ஆட்டுப்பண்ணை ஒன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 119 | கோழிப்பண்ணை ஒன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 120 | நறுமணப் பொருட்களின் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 121 | வெற்றிலைப் பாக்கு விற்பனை நிலையமொன்றைப் பேணுதல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 122 | உணவு மற்றும் பொருட்களை களஞ்சியப்படுத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 123 | வீடியோ, ஓடியோ கெசட்களை அல்லது தட்டுக்களை விற்பனை செய்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 124 | நெல் மற்றும் தானியங்கள் வியாபார நிலையம் ஒன்றை வைத்திருத்தல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 125 | அதிஷ்ட இலாபச் சீட்டு விற்பனை செய்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 126 | மருந்துப் பொருட்கள் உற்பத்தி நிலையமொன்றைப் பேணுதல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 127 | தேங்காய் விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |
| 128 | மூக்குக் கண்ணாடி விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | 300 0 | 750 0 | 1,000 0 |

| தொடர் இல. | நிரல் I | நிரல் II | | |
|---|---|---|---|---|
| | வியாபாரத்தின் தன்மை | வருடாந்த உரிமக் கட்டணம் | | |
| | | ரூ. 750 க்கு உட்படின் ரூபா ச. | ரூ. 751 தொடக்கம் 1,500 வரை ரூபா ச. | ரூ. 1,500 க்கு மேல் ரூபா ச. |
| 129 | சட்டபூர்வ மதுபான விற்பனை நிலையமொன்றை வைத்திருத்தல் | - | - | 5,000 0 |
| 130 | மண்டபங்களை வாடகைக்கு விடல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 131 | ஒலிபெருக்கியை வாடகைக்கு விடல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 132 | கதிரைகள், கொட்டில்கள் மற்றும் பொருட்களை வாடகைக்கு விடல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 133 | மின்பிறப்பாக்கியை வாடகைக்கு விடல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 134 | நீர் இறைக்கும் இயந்திரத்தை வாடகைக்கு விடல் | 500 0 | 750 0 | 1,000 0 |
| 135 | வேளாண்மை அறுவடை இயந்திரம் ஒன்றை பேணுதல் (சிறியது) | - | - | 3,000 0 |
| 136 | வேளாண்மை அறுவடை இயந்திரம் ஒன்றை பேணுதல் (பெரியது) | - | - | 5,000 0 |
| 137 | கனரக வாகனம் மற்றும் இயந்திரங்களை வாடகைக்கு விடல் | - | - | 3,000 0 |
| 138 | கொங்ரீற் மிக்சர் இயந்திரத்தை வாடகைக்கு விடல் | - | 750 0 | 1,000 0 |
| 139 | வெடிக்கும் பொருட்களை களஞ்சியப்படுத்தல் (அரச அனுமதியுடன்) | - | - | 2,000 0 |
| 140 | தோணி வலை கொண்டு மீன் பிடித்தல் | - | - | 500 0 |
| 141 | இயந்திரப் படகு கொண்டு மீன் பிடித்தல் | - | - | 1,000 0 |
| 142 | வங்கி நடவடிக்கை நிலையமொன்றைப் பேணுதல் | - | - | 5,000 0 |
| 143 | காப்புறுதி முகவர் நிலையமொன்றைப் பேணுதல் | - | - | 5,000 0 |
| 144 | தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்றைப் பேணுதல் - | | | |
| | (i) நிலமட்டத்திலிருந்து 20 மீற்றர் வரை | - | - | 15,000 0 |
| | (ii) நிலமட்டத்திலிருந்து 20 மீற்றர் இலும் கூடிய ஆனால் 50 மீற்றர் இலும் உட்பட்டது | - | - | 20,000 0 |
| | (iii) நிலமட்டத்திலிருந்து 50 மீற்றர் இலும் கூடியது | - | - | 30,000 0 |
| 145 | நோயாளர் விடுதி ஒன்றைப் பேணுதல் | - | - | 1,000 0 |
| 146 | விடுதி ஒன்றைப் பேணுதல் | - | - | 1,000 0 |
| 147 | சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு அலுவலகம் ஒன்றைப் பேணுதல் | - | - | 1,000 0 |
| 148 | உத்தரவுபெற்ற நிலஅளவைாளராக இருத்தல் | - | - | 1,000 0 |
| 149 | அனுமதிக்கப்பட்ட படவரைஞராக இருத்தல் | - | - | 1,000 0 |
| 150 | வைத்திய ஆலோசனை வழங்கும் நிலையம் வைத்திருத்தல் | - | - | 1,000 0 |
| 151 | சாரதி பயிற்சி நிலையமொன்றைப் பேணுதல் | - | - | 1,000 0 |
| 152 | தனியார் கல்வி நிறுவனம் ஒன்றைப் பேணுதல் (பாலர் பாடசாலை தவிர) | - | - | 1,000 0 |
